# ஒருங்கிணைந்த பண்ணையத்தில் வெற்றிக்கண்ட விவசாயி

**அ.ராஜ்கலா, தொழில்நுட்பவல்லுநர், (வேளாண் விரிவாக்கம்)**
முனைவர் கோ.அழகுகண்ணன், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்
கிரீடு வேளாண் அறிவியல் மையம், சோழமாதேவி, அரியலூர் மாவட்டம்
அலைபேசி: 9655926547



அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியம் சோழமாதேவி கிராமத்தில் அமைந்துள்ள கிரீடு வேளாண் அறிவியல் மையம் 2009 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிதி உதவியுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இம்மையம் கிரீடு தொண்டு நிறுவனம் மூலம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

இம்மையத்தின் முக்கிய செயல்பாடுகளான பயிற்சிகள், முதல் நிலை செயல்விளக்கம், வயல்வெளி பரிசோதனை, விதை உற்பத்தி மற்றும் விரிவாக்கப் பணிகளை அரியலூர் மாவட்ட விவசாய பெருமக்களுக்கு செய்து வருகின்றது.

செயல்பாடுகளில் ஒன்றான ஒருங்கிணைந்த பண்ணைய முறையை விவசாயிகளுக்கு ஊக்குவிக்கும் வகையில் 2017-18 ஆம் ஆண்டிற்கான திட்டத்தில் திருமானூர் ஒன்றியம் கரைவெட்டி கிராமத்தை சார்ந்த திரு.கே.அசோக்குமார் அவர்களுக்கு மையமானது அவரிடம் உள்ள மூலதனங்களை வைத்து ஒரு எக்டரில் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்திட ஆலோசனை வழங்கியது.



திரு.கே.அசோக்குமார் அவர்களிடம் ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம் பெற்றும் வரும் நன்மைகள் மற்றும் சிறந்து விளங்குவதை பற்றி கேட்டபோது, அவர் கூறுகையில் என்னுடைய வயது தற்போது 41. நான் 10-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு கரைவெட்டி கிராமத்தில் 1 ஹெக்டர் பரப்பளவில் நிலப்பரப்பு உள்ளது.

நான் கடந்த 10 வருடங்களாக LIC ஏஜெண்டாக பணிபுரிந்து வந்தேன். அப்போது என்னிடம் இருந்த ஒரு ஹெக்டர் நிலப்பரப்பில் கரும்பு 2 ஏக்கர் நெல் 1/2 ஏக்கர் சாகுபடி செய்து வந்தேன். அப்போது எனது ஆண்டு வருமானம் ஒரு இலட்சம் மட்டுமே பெற்று வந்தேன்.



இரண்டு வருடத்திற்கு முன்பு அதாவது 2016 ஆம் ஆண்டு எனது நண்பர்கள் நமது மாவட்டத்தில் சோழமாதேவியில் வேளாண் அறிவியல் மையம் செயல்பட்டு வருகிறது. நாம் ஒரு முறை அங்கு சென்று வரலாம் என்று என்னை அழைத்து சென்றார்கள். நானும் மையத்திற்கு சென்று அங்குள்ள தொழில்நுட்ப வல்லநர்களை சந்தித்து பேசுகையில், அவர்கள் நீங்கள் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்தால் நன்றாக இருக்கும் என்று ஆலோசனை கூறினர். அதன்படி மையத்தில் நவம்பர் மாதம் 2016 ல் நடைபெற்ற ஒருங்கிணைந்த பண்ணைய பயிற்சியில் கலந்து கொண்டு என்னுடைய 1 ஹெக்டரில் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைக்க திட்டமிட்டேன்.

முதலில் எனது தோட்டத்தில் இருந்த கரும்பு அனைத்தையும் வெட்டி ஆலைக்கு அனுப்பிய பிறகு மையத்தின் வல்லுநர்கள் பார்வையிட்டு ஆலோசனை வழங்கினர். அதன் படி நான் கீழ்கண்ட முறையில் பண்ணையம் அமைத்தேன்.

மீன் குட்டை - 50 சென்ட்
ஆடு பண்ணை - 50 எண்ணக்கை
கோழி பண்ணை -
மாடு - 3 எண்ணிக்கை
நெல் சாகுபடி - 1 ஏக்கர்



என அமைத்தேன். இதனை அமைக்க அரியலூர் இந்தியன் வங்கி மேலாளரிடம் திட்ட அறிக்கை சமர்பித்து கடன் உதவி பெற்றேன். மேலும் மையமானது ஒருங்கிணைந்த பண்ணைக்கு மண்புழு உரம் தயாரிக்கும் தொட்டி, கால்நடை தீவன புல் விதைகள் கோ 29, கோ 4, வேலிமசால் மற்றும் மரவகை பயிர்கள், அசோலா தொட்டி போன்ற இடுபொருட்களை திட்டத்தின் கீழ் கொடுத்து ஆலோசனை வழங்கினர்.

மேற்கண்ட அனைத்து வகையான வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த செயல்பாடுகளை ஒரு ஹெக்டரில் ஒருங்கிணைந்து தற்போது ஆண்டு வருமானமாக ரூபாய் 6.7 இலட்சம் பெற்று வருகிறேன். வரவு செலவு விகிதம் ஆண்டிற்கு கீழ்கண்டவாறு

| வ.எண் | செயல்பாடுகள் | செலவு (ரூ.) | வருமானம் (ரூ.) | நிகர லாபம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | மீன் குட்டை - 50 சென்ட் | கோழி கழிவு | 60,000 | 60,000 |
| 2. | ஆடு - 50 எண்ணிக்கை | 2,00,000 | 4,00,000 | 2,00,000 |
| 3. | கோழி பண்ணை (ஒரு வருடத்திற்கு 6 batch – 6000 Nos.) | 1,20,000 | 4,20,000 | 3,00,000 |
| 4. | மாடு - 3 எண்ணிக்கை | 1,50,000 | 2,50,000 | 1,00,000 |
| 5. | நெல் சாகுபடி - 1 ஏக்கர் | 40,000 | 50,000 | 10,000 |
| மொத்தம் | | | | 6,70,000 |

தற்போது நான் அரியலூர் மாவட்ட விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையத்தில் முன்னோடி விவசாயியாக இருந்து மற்ற விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி வருகிறேன். இதற்கு உதவியாக இருந்த வேளாண் அறிவியல் மையத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை திரு.அசோக்குமார் அவர்களின் ஒருங்கிணைந்த பண்ணைய முறையை சுமார் 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் பார்வையிட்டு அதில் 28 விவசாயிகள் ஒருங்கிணைந்த பண்ணைய முறையை ஆரம்பித்து உள்ளனர். மேலும் அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சரவணவேல்ராஜ் IAS அவர்கள் பார்வையிட்டு பாராட்டி சென்றார். மேலும் அவர் ஒருங்கிணைந்த பண்ணை முறைபற்றி அகில இந்திய வானொலி நிலையம், திருச்சி, காரைக்கால் மூலம் இதுவரை 55க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு அதாவது தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி உள்ளார். அதுமட்டுமல்லாமல் மையத்தில் நடைபெறும் ஒருங்கிணைந்த பண்ணைய பயிற்சிக்கு பயிற்றுநராகவும் பணியாற்றி வருகிறார்.





எனவே விவசாய பெருமக்கள் ஒரே மாதிரியான பயிரினை சாகுபடி செய்து மகசூல் மற்றும் வருமானம் குறைவாக பெறுவதோடு, ஒருங்கிணைந்த பண்ணைய முறையில் பல வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களை ஒருங்கிணைந்து பாரத பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்கள் கோட்பாட்டின்படி சாகுபடி செலவினை குறைத்து வருமானத்தை இருமடங்காக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

-----------------------